பெக்டர், சி.ஐ.டி. ஒருவர் என் அறைக்கு முன்னாலேயே சுற்றிக்கொண்டிருக்கிறார்; போகு மிடங்களுக் கெல்லாம் வந்துகொண்டிருக்கிறார். இது அரசின் கொள்கையா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, கடிதங்களைப் பிரித்துப் பார்ப்பதும், உறுப்பினரைத் தொடர்ந்து துப்பறிவாளர்கள் வருவதும், இந்தத் தொடக்கக் கேள்விக்கு தொடர்புடைய கேள்வி அல்ல. ஆனால், அவர்கள் ஆரம்பத்திலே இப்படிப்பட்ட அதிகாரிகள், சுருக்கெழுத்தாளர்கள் அனுப்பப்பட மாட்டார்கள் என்று சொல்லப்பட்டதே, பிறகு ஏன் அனுப்பப்படுகிறது என்று கேட்டார்கள். ஏழு மாத காலம் வரை அப்படி அனுப்பாமல் தான் இருந்தது. அதற்குப் பிறகு கூட, சில அரசியல் கட்சி கூட்டங்களில் சற்றுத் தரக்குறைவாக, ஆட்சேபணையாக பல பேச்சுக்கள் பேசப்படுவதாக செய்திகள் வந்த பிறகு, அப்போதும் கூட சுருக்கெழுத்தாளர்களை அனுப்பாமல் ஆங்காங்குள்ள உயர் மட்ட அதிகாரிகளே அப்படிப்பட்ட பேச்சாளர்களை வரவழைத்து அவர்களிடம் எச்சரிக்கை செய்து அனுப்பினார்கள். அதுவும் உற்ற பயனைக் கொடுக்காத காரணத்தால் இப்போது சுருக்கெழுத்தாளர்கள் அனுப்பப்படுகிறார்கள். இவர்களை அனுப்புவது என்று அரசு முடிவு செய்து, 9-10-1967 முதல் அமுலில் இது இருந்து வருகிறது.

திரு. கே. ராமதாஸ் : தலைவரவர்களே, எதிர்க்கட்சிகள் மட்டும்தான் தரக்குறைவாக பேசுகிறார்களா? ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் தரக்குறைவாக பேசுவது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, இரண்டு கட்சிகளின் பத்திரிகைகளையும் எடுத்து ஒரு பொது கமிட்டி நியமித்து ஓராண்டில் வந்திருக்கிற செய்திகளைப் படித்துப் பார்த்தால் எதில் தரக் குறைவான செய்திகள் வந்துள்ளது என்பதை நாம் காண முடியும். ஆகையால் ஆளும் கட்சியின் கூட்டங்களுக்கும் அனுப்ப வேண்டுமென்று நண்பர்கள் விரும்புவார்களானால், இந்த சட்டமன்றமும், சட்டப் பேரவையும் அப்படி கருதுவார்களானால், ஆளும் கட்சியாக இருக்கிற நாங்கள் அதை மிகுந்த விருப்பத்தோடு ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஆனால் இதற்கு முன்னால் இருந்த முதல் அமைச்சர் அவர்கள் இந்த யோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதையும் இந்த நேரத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

திரு. எம். எத்திராஜுலு : தலைவரவர்களே, ஆளும் கட்சியின் கூட்டங்களுக்கு சுருக்கெழுத்தாளர்கள் அனுப்பப்படுவதில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எதிர்க்கட்சிகள் பற்றி, குறிப்பாக காங்கிரஸ் கட்சி பற்றி ஆளும் கட்சிக்காரர்கள் பேசுவதைப் பற்றி சுருக்கெழுத்தாளர்கள் ஏதாவது எழுதி ஆளும் கட்சி அமைச்சர்களுக்கு அனுப்பியிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அனுப்பப்படுகிறது. ஆனால் அவைகள் அலட்சியம் செய்யப்படுகின்றன.

Expenditure on account of Gazetted Personal Assistants

*160-D *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the total expenditure so far incurred towards the pay, Class I Special Pay and Dearness allowance, etc., in respect of the Gazetted Personal Assistants appointed to work under Ministers; and

(*b*) the Ministers to whom the Gazetted Personal Assistants are appointed?

அரசிதழ் பதிவுபெற்ற உதவியாளர்களுக்கான செலவு

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) அமைச்சர்களுக்கு அரசிதழ் பதிவு பெற்ற (Gazetted) உதவியாளர்கள் வேலைக்கு நியமித்ததினால் இது வரை சம்பளம், அகவிலைப்படி ஆகியவைகளுக்கு எவ்வளவு செலவாகியிருக்கிறது ?

(இ) யார் யாருக்கு அரசிதழ் பதிவு பெற்ற உதவியாளர்கள் நியமிக்கப்பட்டனர் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (on behalf of the Hon. the Chief Minister) : (அ) 30-9-1967 தேதிய நிலவரப்படி, ரூ. 31,566·67.

(இ)—(1) கல்வி-தொழில் அமைச்சர்.

(2) பொதுப்பணி அமைச்சர்.

(3) உணவு-வருவாய்த்துறை அமைச்சர்.

(4) அரிசனநல-செய்தித்துறை அமைச்சர்.

(5) சட்டம்-கூட்டுறவு அமைச்சர்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, Gazetted P. A. (உதவியாளர்கள்) போடவேண்டிய காரணமென்ன ? அவர்களால் அதிகப்படியாக கிடைக்கக்கூடிய ஒத்தாசை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவர்களால் நல்ல ஒத்தாசை இருக்கிறது என்று கருதுகிற காரணத்தால்தான் அவர்கள் போடப்பட்டு இருக்கிறார்கள். அதனால் அதிகப்படியான செலவு ஒன்றும் ஆகிவிடவில்லை.

Barani Theatre

***160-E** *Q.*—**Thiru N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—**

(*a*) whether the Kondalampatti Barani Theatre near Salem Town was recently set on fire by goondas ;

(*b*) whether the police had not taken any action in spite of the incident being reported to them ;

(*c*) if so, the details thereof ; and

(*d*) the loss incurred by the threatre ?

பரணி தியேட்டர்

திரு. என் ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அண்மையில் சேலம் நகரை அடுத்த கொண்டலாம்பட்டி பரணி தியேட்டரில், காலிகளால் தீ வைக்கப்பட்டதா ?

(இ) இது சம்பந்தமாக போலீசில் புகார் செய்தும் போலீசார் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையா ?

(உ) ஆம் எனில், காரணங்கள் யாவை ?

(எ) தியேட்டருக்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு ?